# உதயன்

விலை ரூபா 5-00

... 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 16 புதன்கிழமை 01-09-1993 UTHAYAN—A Lively National Tamil Daily ... 277


## ...டற் கரும்புலிகளுக்கு ...ங்கள் திரண்டு அஞ்சலி

### ...நினைவுக் கற்களும் நடப்பட்டன

...ாழ்ப்பாணம், செப். 1 ...த்தித்துறையில் கடற் ...யின் ''டோறா'' அதி ... பீரங்கிப் படகை ...த்து வீரகாவியம்படைத்த ... புகழரசன், கப்டன் ...யரசன் ஆகியோரின் ...ருவப் படங்கள் தாங்கிய ...டி குடாநாட்டின் பல ...களுக்கும் நேற்று ஊர் ...ாக சென்ற சமயம் மக் ...உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் கோட்டங்களுக்கு இந்த ஊர்தி சென்ற சமயம் மக்கள் தமது வீடுகளுக்கு முன்பாக நிறைகுடம் வைத்து மலர் தூவி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

வலிகாமம் கோட்டத்தில் துண்டிச் சந்தி, பாஷையூர், குருநகர், நாவாந்துறை, ஓட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக் கலங்கள் மீது கரும்புலித் தாக்கு தொடரும்

### அஞ்சலி நிகழ்வில் சூளுரை

யாழ்ப்பாணம், செப். 1

''சாதனை படைத்த இந்த இரு மாவீரர்களின் வரிசையில் கடற் கரும்புலிகள் தயாராகி நிற்கிறார்கள் இனி வரும் நாட்களில் தொடர்ந்து கடற்படையினரின் படகுகளையும், கலங்களையும் தகர்த்து அழிப்போம்; அதன் மூலம் கடற்படையினரின் மனோபலத்தை உடைத்தெறிவோம்''.

— இப்படிக் கூறினார் கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஆதவன்

பருத்தித்துறை கடற்பரப்பில் 'டோறா' படகை தகர்த்து வீரகாவியம்படைத்த கடற் கரும்புலிகள் மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று மாலை சுன்னாகம் பஸ் நிலையத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

நல்லூர் வட்டப் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# ...ாரிஸில் புலிகள் பிரமுகர்களுடன் அமைச்சர் தொண்டமான் பேச்சு

## ...மரச யோசனைத் திட்டத்துடன் ...கொழும்பு திரும்பியதாக அறிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 1

அமைதித் திட்டத்திற்கான புதிய முயற்சிகளை மேற்கொண்டு ...மையில் பாரிஸ் மற்றும் லண்டன் ஆகிய நகரங்களுக்குச் சென்று ...பிய அமைச்சர் தொண்டமான், தாம் அங்கு விடுதலைப் புலி... பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியதாக கொழும்பில் தெரிவித்...கிறார்.

இப்பேச்சுக்களின் பயனாக சமரசத் திட்டம் ஒன்றையும் தாம் ...ண்டு வந்திருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

... சார்பு ஏடான ...லி நியூஸ்'' பத்திரி... தகவல் வெளியிடு...லயே அவர் மேற்கண்ட ...களைத் தெரிவித்திருக்... புலிகள் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகருடன் தாம் பேச்சு நடத்தியதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் தொண்டமான் கொண்டு வந்திருக்கும் சமரசத் திட்டம் பற்றிய விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை.

எனினும் இந்த யோசனை விரைவில் அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ...மஷ்டியை ஏற்காதவரை ...ர்வுக்கு சாத்தியம் இல்லை

### ...ாழும்பு வார இதழுக்கு அன்ரன் பாலசிங்கம் பேட்டி

கொழும்பு, செப். 1 ...மஷ்டி அரசமைப்பு ...றயை பெரிய சிங்களக் ...ள் ஏற்றுக் கொள்ளாத ... எந்தத் தீர்வும் சாத்திய...ை.

...ழீழ விடுதலைப் புலிகள் ... அரசியல் ஆலோசகர் ...தி அன்ரன் பாலசிங்கம் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்த ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகையாளர் சுகீஸ்வரா சேனதிராவுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

### சமஷ்டி அமைப்பை பரிசீலிக்க தயார்

தமிழர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய சமஷ்டி கட்டமைப்பு தொடர்பான எந்த யோசனையையும் தீவிரமாகப் பரிசீலனை செய்வதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரவும் அதனைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியந்...

(5 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 1

நேற்று யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் இரும்பொறை (இராசையா ஜெகதீஸ்வரன் — ரயில் நிலை...) ... ... ...

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ...மண்டைதீவுக் கடலில் ...நேற்று பீரங்கிப் படகுகள்

...டைதீவுக்கும் கல்...க்கும் இடைப்பட்ட ...ராந்தியத்தில் — மண்...பக்கமாக — நேற்றுக் ...8 மணி முதல் சுமார் ...மணி நேரம் ஸ்ரீலங்கா ...படையின் இரு பீரங்கிப் ...கள் காணப்பட்டன.

...படகுகளுக்குக் காவ... சிறிய கடற்படைப் ...ள் சிலவும் அக் கடற்...பில் ரோந்து சுற்றின.

...வேளை அப்பகுதிக்கு ... வந்த இரு ஹெலிக்...ர்களும், ஒரு புக்காரா ...மும் அக்கடற் பிராந்தியத்தில் மாறி, மாறி மிகத் தாழப்பறந்து வட்டமிட்டுச் சென்றன.

அதன்பின் காலை 9 மணியளவில் பீரங்கிப் படகுகள் அவ்விடத்தை விட்டு நகர்ந்து மண்ணித்தலைப் பக்கமாகச் சென்று மறைந்தன.

இச்சம்பவங்களினால் கொழும்புத்துறை, மணியந்தோட்டம், பூம்புகார் கரையோரப் பகுதி மக்கள் பதற்றமுற்றுக் காணப்பட்டனர். நண்பகல் 12 மணிக்குப் பின் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (உ-15-17-162)

## வடக்கின் மீது தொடர்ந்து இராணுவ நடவடிக்கை!

போன், செப். 1

வடக்கு குடாநாட்டின் மீதான விமானக் குண்டு வீச்சுக்கள், இராணுவத் தாக்குதல்கள், கடற்படை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இராணுவப் பேச்சாளரை மேற்கோள்காட்டி 'ஐலண்ட்' நாளிதழ் இத்தகவலை வெளியிட்டதாக ஜேர்மன் வானொலி அறிவித்தது.

கடந்த வார இறுதியில் புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையின் மூன்று படகுகள் அழிக்கப்பட்டு 21 கடற்படையினர் கொல்லப்பட்டதை அடுத்து குடாநாட்டின் மீது புதிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும்—

அது தொடரும் என்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

## தகர்க்கப்பட்ட டோறாவின் பெறுமதி 45 கோடி ரூபா!

போன், செப். 1

கடந்த ஞாயிறன்று பருத்தித்துறை ஆழ்கடலில் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட — இஸ்ரேல் தயாரிப்பான — 'டோறா' அதிவேகப் படகின் பெறுமதி பத்து மில்லியன் டொலர் (இலங்கை நாணயப்படி சுமார் 45 கோடி ரூபா) ஆகும்.

ஜேர்மன் வானொலி தனது கொழும்புச் செய்தியாளர் லூஸியன் ராஜகருணநாயகாவை மேற்கோள்காட்டி நேற்றிரவு இவ்வாறு அறிவித்தது.

ஜேர்மன் வானொலி மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று நாட்களில் கடற்படையின் மூன்று கலங்களைத் தகர்த்து 21 கடற்படையினரை புலிகள் கொன்றிருக்கிறார்கள்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பழுகாமம் மோதலில் ராணுவச் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், செப். 1

நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு மாவட்டம் பழுகாமம் இராணுவ முகாமிலிருந்து நாவற்குடா பிரதான வீதி வரை காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கு உணவு கொண்டு சென்ற இரண்டு இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் எதிர்பாராது சந்தித்தபோது ஏற்பட்ட மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இவரிடம் இருந்து ரி-56 1 ரகத் துப்பாக்கி ஒன்றும் ரவைக்கூடு ஒன்றும், ஐ எம். ரவைகள் முப்பதும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (உ-த)

## மட்டு. மாவட்டத்தில் புதிதாக 9 அதிரடிப்படை முகாம்கள்

யாழ்ப்பாணம், செப். 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படையினர் 9 இடங்களில் புதிதாக முகாம்களை அமைத்துள்ளனர்.

போரதீவு, செட்டிப்பாளையம், தேற்றாத்தீவு, தாழங்குடா, மண்முனை, ஆரையம்பதி, அம்பிளாந்துறை, மகிழடித்தீவு கிரான்குளம் ஆகிய இடங்களிலேயே இம் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை— மட்டக்களப்பு எல்லையான பெரியநீலாவணை கிராமத்தில் இருந்து 16 மைல் தூரம் வரையான

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பட்டமளித்து

# பொன்னாடை போர்த்திக் கௌரவித்தலும் பாராட்டுரைகளும்

கோண்டாவில் - குமரகோட்டம்
சித்தி வைரவர் - அம்மாள் ஆலய
உற்சவகாலத்தில்

## விநாயகபுராணம்

என்னும் பொருள் பற்றி

## தொடர் இசைப் பேருரை ஆற்றிய

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின்
பிரதம சிஷ்யன்



கதாகாலேட்சப
வாரிதி, இசைமணி,
இசையரசு,
செஞ்சொற் செல்வன்,
பிரசங்கபூஷணம்
சுழிபுரம்

## நடேசன் சிவசண்முகமூர்த்தி

B. A. Dip-in-Ed.
ஆசிரியர்
அவர்கள்
(சுழிபுரம்
விக்ரோறியாக் கல்லூரி)

இன்று (01 – 09 – 1993) மாலை 6 மணிக்கு பல பேரறிஞர்களால் மேற்படி ஆலய மண்டபத்தில் பாராட்டப்பெறுவார்கள்.

— ஆலய நிர்வாகசபை.

(27138)

# திறப்புவிழா

யாழ்ப்பாணம், செ. 1
சுன்னாகம் தெற்கு மாதிரி குடியேற்றத் திட்டத் திறப்பு விழா இன்று மாலை 5மணிக்கு சுன்னாகம் சிற்றூர் பொறுப்பாளர் திரு. கலியுகன் தலைமையில் நடைபெறும். (த)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 1
யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கத்துவம் பெறாத சமூக சேவை அமைப்புகள் மற்றும் தொண்டர் நிறுவனங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப் பணியகத்தில் நடைபெறும். (த)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASS

02 - 09 - 1993 இல் ஆரம்பமாகின்றது.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

பௌதிகவியல் — திரு. க. கலாகரன்
கணக்கியல் — திரு S. K. பிரபாகரன்
வர்த்தகம் — திரு. R. ரகுநாதன்
அளவையியல் — திரு. A. பிரபாகரன்
இந்து நாகரிகம் — திரு. காரை சுந்தரம்பிள்ளை
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. குணராசா

நேர அட்டவணை

| பாடம் | பிரிவு I மீட்டலும், மாதிரி வினா-விடையும் | பிரிவு II கடந்த கால வினா-விடை |
|---|---|---|
| | செவ்/ | செவ்/ |
| பௌதிகவியல் | வியா 8—10 | வியா 10-12 |
| கணக்கியல் | ,, 10—12 | ,, 8-10 |
| வர்த்தகம் | ,, 12— 1 | ,, 1- 2 |
| அளவையியல் | ,, 1— 2 | ,, 12-1 |

★ ஏனைய பாடங்களுக்கான நேர அட்டவணையை நேரில் பெறவும்.
★ பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.
★ 93 A/L பரீட்சை எடுத்த மாணவர்களின் நவம் சுருதி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

(சி-6024)

# NEW SCIENCE HALL

KANNATHIDY
JAFFNA.

## 94 A/L

அரித மீட்டலுடன் கடந்த கால வினா விடை வகுப்பு

PHYSICS
By
திரு. சோதிலிங்கம்
B.Sc (SPECIAL)


TUE, THU
4.00 — 5.00

ஆரம்பம்:
02 – 09 – 93
THU 4.00 p.m

(சி-5867)

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

03 – 09 – 1993



அமரர் உயர்திரு.
## செ. சபாபதிப்பிள்ளை

அவர்கள் அமரத்துவம் எய்தியதன் 31ஆம் நாள் நினைவும், அந்தியேட்டி வைபவமும் எதிர்வரும் 03 - 09 - 1993 வெள்ளிக்கிழமை அமரரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்று வருகை தந்து கிரியைகளிலும், விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

தந்தை மக்களுக்காற்றுப் பணியில்
தனி வழி காட்டி எம் உயர்வுக்காய்
எழுபத்திமூன்று ஆண்டுகள் உழைத்து - மீளா
உறக்கத்தில் எமைவிட்டு இறைவனடி -
சென்றனையோ.

அமரரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

கியேட்டர் வீதி,
அச்சுவேலி.

(27137)

# கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

கணக்கியல்

வர்த்தகமாணி
முதற்தேர்வு
(First in Com)

வணிகமாணி I
(B. Com Part I)

ஆரம்பம்:
3 - 9 - 1993
பிற்பகல் 3 மணி

குறிப்பு:
முற்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

ஸ்ரீ B. Com (Hons)

(சி-6025)

# A/L 94

DAY CLASSES

கலை, வர்த்தக
பாடங்கள்

ஆரம்பம்:
02 — 09 — 1993
வியாழன் மு.ப. 8-00
எமது வழமையான
ஆசிரியர்கள்

SHAMROCK
யாழ். கஸ்தூரியார் வீதி.

(27140)

# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்
## பொன்னம்பலம் றொபேட் ஞானசீலன்

அன்னை மடியில்: 21 – 11 – 1970
ஆண்டவன் பிடியில்: 12 – 09 – 1992

திதி: 01 – 09 – 1993

பாசத்தின் சுமையோடு
பறந்து சென்ற தம்பி பிரபு
ஆனைக் கோட்டை மண்சரிவில்
உன் அம்மாவை நினைத்து
உன் உயிர் பிரிந்ததையா
உங்கள் மூகத் தொழியினிலே
நாங்கள் காத்திருந்த
கலகலப்பு வாழ்க்கை எல்லாம்
கனவாய் மறைந்தது தம்பி பிரபு
ஓராண்டு காலம்-நீங்கள்
எமை விட்டுப் பிரிந்தாலும்
தீராது எம் கவலை
மாறாது உம் நினைவு.

தாய், குடும்பத்தினர்.

இராசவீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

[27139]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் 3 ஆண்டுகளில் 872 அரச ஊழியர்கள் பலி

## 'ராவய' பத்திரிகை தகவல்

கொழும்பு, செப் 1

1990 ஆம் ஆண்டு முதல் இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் ராணுவ நடவடிக்கைகளாலும் மற்றும் வன்முறைச் சம்பவங்களினாலும் 872 அரசாங்க ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

''ராவய'' பத்திரிகை மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இப்படியானவர்களின் மரணச் சான்றிதழ்களைப் பெறுவதில் சிரமங்கள் இருப்பதால் குடும்பத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட நஷ்ட ஈட்டைப் பெறமுடியாது கஷ்டப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1983 முதல் 20 ஆயிரத்து 40 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்றும்—

5 ஆயிரத்து 674 பேர் காயம் அடைந்துள்ளனர் என்றும் ''ராவய'' மேலும் தெரிவித்துள்ளது. (இ-6)

# ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை

## வினாத்தாள் திருத்தும் பணி முதல் கட்டம் பூர்த்தி

கொழும்பு, செப் 1

நடந்து முடிந்த ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் வேலைகள் கடந்த மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் உள்ள ஆறு பாடசாலைகளில் ஆரம்பமாகின.

திருத்தும் பணியில் முதலாவது கட்டம் நேற்றுடன் முடிவடைவதாக இருந்தது. இரண்டாம் கட்டத் திருத்த வேலை இன்று ஆரம்பமாகி 14ஆம் திகதி முடிவடையும். ஒரு லட்சத்து 48 ஆயிரம் பரீட்சார்த்திகளின் சுமார் 6 லட்சம் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு வருகின்றன.

ஐயாயிரம் பரிசோதகர்கள் விடைத்தாள்களை திருத்தி வருகின்றனர்.

றோயல் கல்லூரி, விசாகா வித்தியாலயம், ஆனந்த பாலிகா, நாலந்தா கல்லூரி, ஆனந்தா கல்லூரி, மகாநாம கல்லூரி ஆகியவற்றில் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு வருகின்றன இப்பாடசாலைகள் செப்டம்பர் 14ஆம் திகதியே மீண்டும் இயங்கும்.

## அரசமைப்பில் திருத்தம்:

# தெரிவுக்குழுவை பகிஷ்கரிக்க சமசமாஜக்கட்சி கோரிக்கை

கொழும்பு செப். 1

அரசமைப்பில் திருத்தங்கள் செய்வது குறித்து ஆராய்ந்து சிபார்சு செய்ய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை புறக்கணிக்கும்படி எல்லா எதிர்க்கட்சிகளையும் லங்கா சமசமாஜக் கட்சி கேட்டுள்ளது

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் பிரதான கோரிக்கையை தட்டிக்கழிக்கும் ஒரு தந்திரோபாயமாகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அரசு நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-எ)

# ராணுவத்தில் 10,500 பேர் புதிதாக சேர்ந்தனராம்

கொழும்பு, செப். 1

ஸ்ரீலங்கா இராணுவம் புதிதாக 10 ஆயிரத்து 500 பேரை படையணியில் சேர்த்துள்ளதாம்.

கடந்த மாதம் 23ஆம் திகதியில் இருந்து இராணுவத்திற்குப் புதிதாக ஆட்திரட்டலை இராணுவம் நடத்தி வந்தது.

முதல் மூன்று தினங்களில் சமுகமளித்த 20 ஆயிரம் விண்ணப்பதாரிகள் மத்தியில் இருந்து 10 ஆயிரத்து 500 பேரை புதிதாக இராணுவத்துக்குத் திரட்ட முடிந்தது என்றும் —

இன்னும் 3 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் லங்காபுவத்துக்குத் தெரிவித்ததாக ''சண்டே ஒப்சேர்வர்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

இராணுவத்தில் சேர்வதற்கு குறைவானவர்களே முன்வருவதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட செய்திகளைப் பொய்யாக்கும் விதத்தில் பெரும் எண்ணிக்கையில் இளைஞர்கள் முன்வந்ததாகவும் லங்காபுவத் தெரிவித்தது. இராணுவத்தில் சேர்வதற்குரிய வயதை 17 ஆகக் குறைத்த இருந்தும், 16 வயதான இளைஞர்களும் படையில் சேர முன்வந்ததாகவும் லங்காபுவத் தெரிவித்தது.

# பதவி உயர்வு நியமனக் கடிதம் சிங்களத்தில்

யாழ்ப்பாணம், செப் 1

யாழ் போதனா வைத்திய சாலையில் சிற்றூழியர்களாக கடமைபுரிந்தவர்களில் 10 பேர் போட்டிப் பரீட்சை மூலம் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பதவி உயர்வு நியமனக் கடிதம் கொழும்பு சுகாதார மகளிர் விவகார அமைச்சில் இருந்து தனிச் சிங்களத்தில் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-15)

# கால்நடைகள் வெட்டுவதில் புதிய ஒழுங்கு முறைகள்

யாழ்ப்பாணம், செப். 1

வெளிமாவட்டங்களிலிருந்து கால்நடைகள் கொண்டு வரப்படும் போது கால்நடை வைத்தியரின் சான்றிதழ் பெறப்பட வேண்டும். கால்நடைகள் அல்லிப்பளையிலுள்ள தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் பரிசோதனை நிலையத்தில் 3 நாட்கள் வரை கட்டி வைக்கப்படும்.

அதன் பின்னர் அந்தந்த கால்நடைகள் இறைச்சிக்கு வெட்டுவதற்கு உகந்தது என்று சான்றிதழ் கொடுத்து அவற்றின் காதுகளிலும் அடையாளம் இடப்படும்.

அதன் பின்னரே அவை யாழ். மாவட்டத்திற்குள் கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படும்.

இரு மாத காலத்தினுள் மிருக வைத்தியர்கள் பிரதேச சபை கால்நடை தொழுவத்தில் கட்டப்பட்டுள்ள எல்லா பசுமாடுகளையும் பரிசோதித்து அனுமதி வழங்க ஒழுங்கு செய்ய வேண்டும். இரு மாதத்தின் பின் மிருக வைத்தியருடைய அனுமதி பெறாத பசுமாடுகளை பொது சுகாதார பரிசோதகர் இறைச்சிக்காக வெட்டுவதற்கு அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு சென்ற 21ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மத்திய மருந்தகத்தில் நடைபெற்ற இறைச்சிக் கடை உரிமையாளர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட முக்கிய சில தீர்மானங்கள் வருமாறு:

★ வெட்டுவதற்குக் கொண்டு வரப்படும் கால்நடைகள் அனைத்தும் அப்பகுதி பிரதேச சபை தொழுவத்தில் 24 மணித்தியாலங்கள் கட்டப்பட்டு பொது சுகாதார பரிசோதகர் பார்வையிட்டு அனுமதி வழங்கிய பின்னரே கொல்களத்துக்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

★ கால்நடைகளுக்குரிய உணவும், நீரும் இறைச்சிக் கடை வியாபாரியால் வழங்கப்பட வேண்டும்.

★ உள்ளூராட்சி மன்றங்களால் அனுமதிக்கப்பட்ட இறைச்சிக் கடைகள் மட்டுமே இறைச்சி விற்பனைக்காக அனுமதிக்கப்பட வேண்டும்.

★ முத்திரையிடப்படாத இறைச்சிகள் விற்பனை செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

★ இறைச்சிக் கடைக்காரர்கள் சில சமயங்களில் பழைய இறைச்சிகளை விற்பனை செய்வதால் பொது சுகாதார பரிசோதகர்கள் கொல்களங்களில் மாத்திரமன்றி இறைச்சிக் கடைகளையும் பார்வையிட வேண்டும்.

★ சம்பந்தப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் வட்டவைப் பொறுப்பாளர் அல்லது காவல்துறையினருடன் தொடர்பு கொண்டு சட்டவிரோத கொல்களங்கள் இறைச்சிக்கடைகளை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். (ஓ-162)

# லெப்டினன்ட் காமினிகுமார மாதகலில் உயிரிழப்பு

கொழும்பு, செப். 1

மாதகல் பகுதியில் அரச படையினரின் இராணுவ நடவடிக்கையை எதிர்த்து விடுதலைப்புலிகள் அண்மையில் நடத்திய பதில் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவ அதிகாரியின் பெயர் லெப்டினன்ட் காமினி குமார என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் நான்காவது காலாட் படைப் பிரிவைச் சேர்ந்தவர் ஆவார்.

இதே வேளை— விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அண்மையில் கிளாலிக் கடலில் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்படை அதிகாரி சப் லெப்டினன்ட் லங்கா திலக என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

# ஆய்வுகூடம் இயங்குகிறது

தென்மராட்சி, செப் 1

கடந்த ஒரு வருடமாக மூடப்பட்டிருந்த சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை ஆய்வுகூடம் கடந்த 20ஆம் திகதி முதல் இயங்கத் தொடங்கியுள்ளது. (ச-117)

# விறகு ஏற்றிவர அனுமதிப் பத்திரம் இன்று முதல் புதிய நடைமுறை அமுல்

யாழ். குடாநாட்டு மக்களின் விறகுத் தேவையின் பெரும் பகுதி கடந்த காலங்களில் பிற மாவட்டங்களிலிருந்தே பெறப்பட்டு வந்தது.

விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்த வேளையில் போக்குவரத்து சிரமையால் யாழ். குடாநாட்டு மக்களின் விறகுத் தேவையை யாழ். குடாநாட்டுக்குள்ளேயே முழுமையாகப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் விறகுத் தேவையின் பொருட்டு நீண்டகாலம் பயன்தரக்கூடிய மரங்கள் எல்லாம் கட்டுப்பாடு இன்றி வெட்டி அழிக்கப்படுகின்றன.

ஸ்ரீலங்கா அரசும் எமது தேசத்தின் காட்டுவளத்தினை திட்டமிட்டு அழித்து வரும் அதேவேளையில் நாமும் அதனுடன் போட்டியிட்டு எமது வளத்தை அழிப்பது எவ்வகையில் பொருந்தும்? நாளை பிறக்கப்போகும் தமிழீழம் மரங்கள் அற்ற வனமற்ற ஒரு பூமியாகவா மீட்கப்படல் வேண்டும்?

இவற்றைக் கருத்திற் கொண்டு எதிர்கால நோக்கோடு மரங்களைத் தறிப்பதை ஒழுங்குபடுத்தவதோடு மீள்நடுகையினையும் மேற்கொள்ளும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் இன்று முதலாம் திகதி தொடக்கம் கட்டுப்பாடு இன்றி மரம் தறித்தலைக் குறைப்பதற்காக விறகு கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையினை அறிமுகப்படுத்தி அதனூடாக சூழலைப்பாதுகாக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முனைகின்றது

இது சம்பந்தமான விதி முறைகள் பின்வருமாறு.

1, கூடுதலாக காட்டுமரங்கள் தறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை தவிர்த்து ஒருமுகப்படுத்தும் வகையில் தென்மராட்சியில் ஒரு விறகு விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு விறகுகள் கொள்வனவாளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

2. அ மேற்படி நிலையத்தில் கொள்வனவு செய்து கொண்டுவருவதற்கான அனுமதிப்பத்திரத்தை கொள்வனவாளர்கள் பனை வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஆ: உள்ளூரில் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு விறகு எடுத்துச் செல்வதாக இருந்தாலும், அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். இதற்கான அனுமதி கோரும் விண்ணப்பப்படிவத்தை அவ்வப்பகுதி வட்டத் தொடர்பாளரிடமிருந்து பெற்று பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும்.

3. போக்குவரத்து அனுமதிப்பத்திரம் விண்ணப்பதாரியிடம் இருந்து விறகின் அளவிற்கேற்ப நிதி அறவிடப்படும். இந்த நிதி திட்டமிட்ட வகையில் மரக்கன்றுகள் மீள்நடுகைக்கு பயன்படுத்தப்படும்.

4. வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் அது வழங்கப்பட்டு 24 மணி நேரத்திற்கு செல்லுபடியாகும். இதனை ஒரே ஒரு தடவை மட்டும் பயன்படுத்த முடியும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது விறகு கொண்டு செல்லும் முன்னரே காலாவதியாகும்போது அனுமதி வழங்கிய வட்டத் தொடர்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும்.

5. அனுமதியின்றி விறகு கொண்டு செல்பவர்கள் இனம் காணப்படும் பட்சத்தில் [illegible] குற்றப்பணம் அறவிடப்படும். இதற்காக கொண்டு செல்லும் விறகின் பெறுமதியின் 3 மடங்கு பணம் அறவிடப்படுவதுடன் விறகும் பறிமுதல் செய்யப்படும்.

6 ஒவ்வொரு வட்டங்களிலும் நிதித்துறையால் பதிவு செய்யப்பட்ட விறகு விற்பனை நிலையங்களில் நுகர்வோர் தத்தமது தேவைக்காக கொள்வனவு செய்யும் போது அந்நிலையத்தால் வழங்கப்படும் பற்றுச்சீட்டுடன் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவர். (இதற்கு பிரத்தியேக அனுமதிப் பத்திரம் தேவைப்படாது)

7. தென்னை பனை மட்டைகள், தேங்காய் மட்டைகள், கதிபால்கள், ஊமல் போன்றன கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறப்படத் தேவையில்லை.

8. காவல்துறையினரால் அனுமதி பெறப்படாது கொண்டுவரப்பட்ட விறகுகள் பறிமுதல் செய்யுமிடத்து இந்த விறகுகள் அல்லது மரங்கள் பொது ஏலத்தில் விடப்படும்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான மேலதிக விவரங்களை த. பொ. மே. நிறுவன வட்டத் தொடர்பாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். (இ)

# விவசாயிகளுக்கு அறிமுக அட்டை

யாழ். மாவட்டத்திலே உள்ள பயிர்ச்செய்கையாளர் அனைவருக்கும் விவசாய அறிமுக அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் சகல வட்டங்களிலும் அமைந்துள்ள கிராமிய உற்பத்திக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பான விவரங்கள் கிராமிய உற்பத்திக் குழுக்களினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

அவ்வப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்புகொண்டு விவசாய அறிமுக அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது. (ஓ)

# நலன்காக்கும் குழு

நல்லூர்ப் பிரதேசத்தில் ஏற்படும் அனர்த்தங்களைச் சமாளிக்கவும் இடம்பெயர் மக்களின் நலன்களைக் கவனிக்கவும் பிரதேச செயலர் திரு ஆ. மகாலிங்கம் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ச-148)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**பாலராசிரியராக**

பாலராசிரியர்ப் பயிற்சி நெறி ஆரம்பமாகிறது. க.பொ.த (சா/உ) குறைந்த பட்ச தகைமையாகும். நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலை கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6456)

**இலவச திருமண சேவை**

29 வயது, மிருகசீரிடம், செவ்வாய் 2, நோர்வேயில் Medical Engineering படித்து வேலை செய்பவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து அழைக்கலாம். தொடர்பு ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ் நாச்சிமார் கோவிலடி. (27132)

**புலமைப்பரிசில் பரீட்சை**

1994இல் புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் 4ஆம் ஆண்டு மாணவர்களுக்கு 5-9-93இல் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. Faculty of Bright Studies, 17/4, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி. (27127)

**மணமகள் தேவை**

யாழ். இந்து, 33 வயது, திருவாதிரை 7இல் செவ்வாய், M. B. B. S. டாக்டருக்கு அழகும், நற்குணமும் உடைய படித்த மணமகள் தேவை. சீதனம் உட்பட முழுமையான விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 556, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27120)

---

# ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்மன்
தேவஸ்தானம்

# பூங்காவன உற்சவமும், திருவூஞ்சல் நூல் வெளியீடும்

காலம்: 01 — 09 — 1993 புதன் இரவு 7மணி

இடம்: மேற்படி தேவஸ்தானம்

தலைவர்: திரு. வே. சின்னத்துரை (கிராம சேவை அலுவலர், ஊரெழு)

ஆசியுரை: சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் (கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)

ஆய்வுரை: பேராசிரியர் கோபாலகிருஷ்ணஐயர்

மதிப்பீட்டுரை: திரு. அ. த. கிருஷ்ணராஜா (கிராம சேவை அலுவலர் உரும்பராய்)

முதற் பிரதி பெறுபவர்:
சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள் (ஊரெழு, ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்)

இணைப்பிரதி பெறுபவர்:
சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் (ஊரெழு இளாலைப்பதி ஸ்ரீ பர்வத பத்தினி அம்மன் கோயில்)

நன்றி உரை: திரு. சி. பாலசுப்பிரமணியம் (அதிபர், உரும்பராய் இந்துக்கல்லூரி)

தீ மிதிப்பு வைபவம் மாலை 6 00 மணிக்கு நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி தேவஸ்தான பிரதம குரு,
சிவஸ்ரீ மு. கிருஷ்ணசாமிக் குருக்கள்.

(27133)

---

# தொழுநோயை முற்றாக ஒழிக்க நடவடிக்கை

## மத்திய நிலையம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 1

இரண்டாயிரம் ஆண்டளவில் இலங்கையில் இருந்து முற்றாகத் தொழுநோயை ஒழித்துக் கட்டுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் கொழும்பிலுள்ள மத்திய தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையம் நடவடிக்கை எடுக்கும்.

வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களமும் இதற்கான செயற் திட்டங்களை முனைப்புடன் செயற்படுத்த உள்ளது.

மத்திய தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையத்தில் தொழுநோய் கட்டுப்பாட்டு பணியாளருடன் அண்மையில் நடைபெற்ற தொழுநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கான கலந்துரையாடலில் இதுபற்றி தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும்—

ஐந்து நாட்கள் வரை கொழும்பில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்புகளில் தொழுநோயாளர்களின் சிகிச்சையும் பராமரிப்பும் சம்பந்தமான புதுவித உத்திகளுடன் கூடிய விவரங்கள் குறித்து விளக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-162)

---

## அறிவுக் களஞ்சியம்-15

நாளை 02 09 93இல் வெளிவருகிறது!

சிறந்த அறிவியல் ஏடு

விலை ரூபா 12/- மட்டும்

(சி 6023)

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி, யாழ்.

**SPOKEN ENGLISH**
by
**BRITTO**

புதிய பிரிவு
ஆரம்பம்:
**04-09-93**

(சி/6015)

---

## நன்றி நவிலல்

**சின்னையா காசிலிங்கம்**
(மலேசியா)

திரு சின்னையா ஆனந்தலிங்கத்தினதும், திருமதி பரமேஸ்வரி பாலசிங்கத்தினதும் அன்புச் சகோதரன் சின்னையா - காசிலிங்கத்தின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறி, அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சி. ஆனந்தலிங்கமும்,
(முகாமையாளர் மக்கள் வங்கி,
யாழ். பிரதான வீதி),
குடும்பத்தினரும்.
159, பலாலி வீதி,
கோண்டாவில்.

திரு. திருமதி இ. பாலசிங்கம்,
71/6, ஸ்ரேசன் றோட்,
யாழ்ப்பாணம். (27136)

---

## கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.
வெலிங்டன் சந்திக்கு அருகாமை
யாழ்ப்பாணம்.

## A/L 93

பரீட்சை எடுத்த மாணவர்களின் கவனத்துக்கு!

பொருளியல்
கணக்கியல்
புள்ளி வழங்கும் திட்டம்

வெளிவந்து விட்டதால் அதுபற்றிய கலந்துரையாடல் 02-09-93 வியாழன் காலை 8 மணிக்கு நடைபெறும்.

— நிர்வாகி.

(சி-6020)

---

## லக்கி இன்ஸ்ரிரியூட்

K. K. S. றோட், சுன்னாகம்.

புதிய பிரிவு
**SPOKEN ENGLISH**
**WITH GRAMMAR**
BY: **Mr. BRITTO**

ஆரம்பம்; 02 — 09 — 1993
வியாழன் காலை 8 30

(27123)

---

## கண்ணீர் அஞ்சலி

எனது பிரிய சிநேகிதி ரமணிகாவின் தந்தையார்
**பொ. சபாரத்தினம் அவர்களின்**
மரணம் குறித்து எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமலிங்கம் இரஞ்சினி.
9I கணிதப் பிரிவு,
வேம்படி மகளிர் கல்லூரி.

(27131)

---

## பொது அறிவித்தல்
**யாழ். மாநகரசபை**

31 - 12 - 1992 வரையான காலப்பகுதிக்குரிய சோலைவரியை இதுவரை செலுத்தாதவர்கள் தயவு செய்து கூடிய விரைவில் செலுத்தி மேல் நடவடிக்கையைத் தவிர்த்து சபையுடன் ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 27-08-1993.
(சி-5866)

---

# கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A.
யாழ்ப்பாணம்.

## A/L 1994 பகல் நேர வகுப்புகள்

| பாடங்கள் | கிழமை | பிரிவு I பாடத்திட்டம் | பிரிவு II மீட்டல் வினா - விடை | ஆசிரியர் குழு |
|---|---|---|---|---|
| பொருளியல் | செவ் / வியா | 8 — 10 | 10 — 12 | திரு. உதயன் |
| கணக்கியல் | செவ் / வியா | 10 — 12 | 8 — 10 | திரு ஸ்ரீ |
| அளவையியல் | செவ் / வியா | 12 — 2 | 12 — 2 | திரு சயந்தன் |
| வர்த்தகம் | சனி / ஞாயிறு | 7 — 9 | 7 — 9 | திரு- இரட்ணம் |
| இந்து நாகரிகம் | சனி / ஞாயிறு | 11 — 12 | 11 — 12 | திரு. ஜே தீஸ்வரன் |
| தமிழ் | சனி / ஞாயிறு | 12 — 1 | 12 — 1 | திரு சங்கரராசா |
| புவியியல் | சனி / ஞாயிறு | 1 — 2 | 1 — 2 | திரு. வேலா |
| கிறிஸ். நாகரிகம் | சனி / ஞாயிறு | 11 — 12 | 11 — 12 | திரு. நோபேட் |
| அரசியல் | சனி / ஞாயிறு | 11 — 12 | 11 — 12 | திரு. பஞ்சு |

**ஆரம்பம்: 02 - 09 - 93 [காலை 8 மணி]**

குறிப்பு:
1. அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
2. A/L 1993 ஆகஸ்டில் பரீட்சை எடுத்த மாணவர்கள் மட்டும் இப் பிரிவுகளில் அனுமதிக்கப்படுவர்.

— நிர்வாகம்

(சி-5696)

---

## வெளிவந்துவிட்டது!

க. பொ. த. மாணவர்களுக்கான

**அறிவியல் விளக்கம்**

500 வினாக்களும் - விடைகளும் அடங்கியது.

ஆக்கம்:
**இரா. செல்வவடிவேல்**

✶ சகல முன்னணித் தனியார் கல்வி நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(27134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்:

## விறகோ, விறகு!

குடாநாட்டு மக்களுக்கு இன்று கிடைத்தற்கரிய பொருள்களில் ஒன்றாகி விட்டது விறகு. முன்னரெல்லாம் வீட்டில் அடுப்பு எரியவில்லை எனும்போது அந்த வீட்டில் வறுமை நிலவுகிறது என்பதே மறைமுகப் பொருள். ஆனால் இப்போது, வீட்டில் அடுப்பு எரியவில்லை என்றால் விறகு கிடைக்கவில்லை என்ற புதுப் பொருள் பிறந்துள்ளது.

அடுக்களைப் பொருளாக மட்டுமே இருந்த விறகு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையாகி விட்டது. வெறும் பெண்கள் விவகாரமாக இருந்த விறகு இன்று சமூக—பொருளாதாரப் பிரச்சினையின் ஓர் அங்கமாகி விட்டது. எங்கும் விறகு என்பதே பேச்சு.

குடாநாட்டு மக்கள் வெளியிலிருந்து — வன்னியிலிருந்து — வரும் மரங்களை விறகுக்கு முழுக்க முழுக்க நம்பியிருந்ததே இந்த அவல நிலைக்குக் காரணம். எரிபொருள்களுக்கு சிங்களவர் பிரதேசத்திலிருந்து வரும் மின்சாரம், எரிவாயு ஆகியவற்றை நம்பியிருந்ததும் மற்றொரு காரணம்.

விறகு அன்றாட வாழ்விலக்கத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள். அதில் ஓர் அரைப்பங்கினையாவது நமது பிரதேசத்திலேயே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மக்களிடமும் இருக்கவில்லை; நிர்வாகத்தைக் கையாண்ட அரசியல்வாதிகளிடமும் இருக்கவில்லை. அதிகாரிகளிடமும் இருக்கவில்லை.

குடாநாட்டில் மலைகள், ஆறுகள் இல்லாதது போலவே, வனவளம் என்று சொல்லத்தக்க பெருங்காடுகளுமில்லை. ஆங்காங்கே பற்றைக்காடுகளே உள்ளன. இருக்கும் பற்றைக் காடுகளையும் அழித்து விறகுத் தேவையைப் பூர்த்திசெய்தோமானால் இனிமேல் பல நாசகரமான சூழல் மற்றும் புவியியல் பாதிப்புகளை எதிர்நோக்க நேரிடும்.

எனவே பற்றைக் காடுகளை விறகுக்காகக் கண்டபடி வெட்டுவதை தடுத்து, ஒழுங்குபடுத்த வேண்டியது இன்றியமையாததாகும். காட்டை வெட்டி விறகாக்குவதில் உள்ள தீவிரத்தை விட, காடு வளர்ப்பிலும், மர நடுகையிலும் பன்மடங்கு தீவிரம் அவசியம். இங்கே விளைவுணர்ந்த திட்டமிடுதலும், ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளும் தேவை

காடு வளர்ப்பு, வீடுகள் வீதிகளில் மரம் வளர்ப்பு, வெற்றுத்தரைகளில், கடற்கரை ஓரங்களில் மரம் வளர்ப்பு தீவிர அடிப்படையில் மேற்கொள்ளப் படவேண்டும். வெட்டப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் பதிலாக ஆகக் குறைந்தது 15 மரங்கள் நடுகை செய்யப்பட்டால் மட்டுமே நாம் விறகுத் தேவையை பூர்த்தி செய்யும் அதேவேளை வனவளத்தையும்—மரவளத்தையும்— பேண முடியும். இதனை ஒரு சமூக நலத் திட்டமாக மாற்றி ஒருமுகப்படுத்தப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட முறையில் செயலாக்க வேண்டும்.

அதேவேளை விறகைச் சிக்கனமாகப் பாவிப்பதற்கு (இரட்டைச் சூட்டடுப்பு போன்ற) புதிய சாதனங்களை அறிமுகப்படுத்தி பிரபல்யப்படுத்த வேண்டும்; அதுபோல சாண விறாட்டி போன்ற மாற்று எரிபொருள்களையும் சந்தைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

இத்தகைய ஒரு நிலை உருவாகும் வரை சமையல் சக்திக்கான விறகின் விலை மக்களின் சராசரி வாங்கும் சக்திக்கு அப்பால் செல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இன்று முதல் நடைமுறைக்குக் கொண்டு வரும் விறகு தறிப்பதற்கான புதிய ஒழுங்குமுறைகள் அதற்குப் பெரிதும் உதவவேண்டும்; உதவும் என நம்பலாம்.

## விளையாட்டு நிகழ்வுகள்

பாலஷ்யூா சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3 45 மணி:- பாடும்மீன் "II" அணி எதிர் யங்ஹென்றியஸ் அணி.

★ 5 00 மணி:- அரியாலை அணி எதிர் சென். மேரிஸ் அணி.

o o o

புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும். ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு;-

★ 3-45 மணி:- அராலி அண்ணா "ஏ" அணி எதிர் புத்தூர் குமரகுருபரன் "ஏ" அணி.

★ மயிலங்காடு ஞான முருகன் "பி" அணி எதிர் அரியாலைஐக்கிய வி. க. "ஏ" அணி.

## ஆலயங்களில்

கோண்டாவில் குமரகோட்டம் சித்தி வைரவர் அம்பாள் ஆலயத்தில் விநாயகர் புராணத் தொடர் இசைப்பேருரை ஆற்றிய பிரசங்க பூஷணம் ந சிவசண்முகமூர்த்தி இன்று மாலை 6 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறும் வைபவத்தில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார். (த)

o o o

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் விசேட அபிஷேகம், பூசை ஆராதனைகள், வழிபாடுகள் நடைபெறும்.

## இன்று

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில் தொண்டர் சபையினரால் ஒழுங்குசெய்யப்பட்ட "ஆலய வழிபாட்டு முறைகள்" எனும் தலைப்பிலானதோர் ஆய்வரங்கு இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். [க-72]

## இசை விருந்து

யாழ்ப்பாணம், செப். 1

ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவன பிரவேச தெய்வீக இசைவிருந்து நிகழ்ச்சிகள் இன்று 1ஆம் திகதி முதல் 3ஆம் திகதி வரை நல்லூர் கோயில் வீதியிலுள்ள கண்ணன் ஆலய ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் மிருத்திகாவில் தினமும் மாலை 4. 30 மணிக்கு நடைபெறும்.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 1

விடுமுறையின் பின் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக இன்று திறக்கப் படவிருக்கின்றன.

---

### வீரச்சாவு..

(5 ஆம் பக்கம் பார்க்க)

வடைந்தார்.

இவரது வித்துடல் இன்று பிற்பகல் 1 மணிக்கு கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையத்திலும் —

பி. ப. 2. 30 மணிக்கு நாவலர் வீதி ஐந்து சந்தியில் உள்ள கார்த்திகா பாலர் பாடசாலையிலும் —

மாலை 4 மணிக்கு நல்லூர் கோவில் வீதி திலகக்கோட்டை அரசியல்துறை செயலகத்திலும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

பின்னர் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முழு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூரண இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்படும். (உ)

# நீர்மூழ்கிக் கப்பல்களின் வேலையை தனித்து சாதித்த கடற் கரும்புலிகள்

## நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா அஞ்சலியுரை

யாழ்ப்பாணம், செப் 1

உலகில் யுத்தக் கப்பல்களை நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலமே தகர்த்தனர். ஆனால் நவீன தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட ஸ்ரீலங்காவின் கடற்படைப் படகை நீர்மூழ்கிக் கப்பலின்றி விடுதலைப் புலிகள் எப்படித் தகர்த்தார்கள்? எப்படி ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள் என்பது குறித்து சர்வதேச ஆய்வாளர்கள் ஆய்வு செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது

—இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் நீதி. நிர்வாகப்பொறுப்பாளர் திரு. பரா.

நேற்று மாலை சுன்னாகத்தில் நடந்த கடற்கரும்புலிகளுக்கான அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழர்களின் வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாக இத்தாக்குதல் அமைந்துள்ளது.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழவும் மண்ணை மீட்கவும் தங்களையே இழக்கத் தயாரான கடற் கரும்புலிகள் வரலாற்று நாயகர்கள்; தமிழ் மக்களின் வரலாற்றில் பூஜிக்கப்பட வேண்டியவர்கள்; தமிழ்மக்களின் வரலாற்றில் இடம்பெற வேண்டியவர்கள். அந்த மாவீரர்களின் சாதனையால் இன்று தமிழினம் தலை நிமிர்ந்து நிற்கிறது.

சர்வதேச அரங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய வீர சாதனையை அவர்கள் புரிந்துள்ளனர்—என்றார்.

இக்கூட்டத்தில் வலிகாமம் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் சந்திரிகா, யாழ். மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் இளையவன், மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் தமிழவள் உட்பட பலர் உரையாற்றினர்.

கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை, யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு சி. இளம்பரிதி ஆகியோர் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(உ-3)

# இஸ்ரேலின் யோசனையை வரவேற்கின்றார் அரபாத்

கெய்ரோ, செப். 1

காஸா பிரதேசம் மற்றும் மேற்கு கரைப் பட்டினமான ஜெரிக்கோ ஆகியவற்றில் உள்ள பலஸ்தீனியர்களுக்கு வரையறுக்கப்பட்ட சுயாட்சி வழங்கும் இஸ்ரேலிய யோசனையை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் ஆதரித்துள்ளார்.

இஸ்ரேலின் சுயாட்சி வழங்கும் திட்டத்துக்காக பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலுக்கு சலுகை எதனையும் வழங்கவில்லை என்றும் அவர் கூறினார்.

பலஸ்தீன தாயகப் பூமியை மீட்டெடுக்கும் வரை பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆயுதப் போராட்டத்தைக் கைக்கொள்ளும் என்ற கொள்கைப் பிரகடனத்தை விட்டுக் கொடுக்க பலஸ்தீன விடுதலை இயக்கம் இணங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை —

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் உள்ள கடும்போக்காளர்கள், பலஸ்தீனிய இலட்சியத்தை அரபாத் விற்றுவிட்டார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுயாட்சி வழங்கும் உடன்பாட்டில் இஸ்ரேலுடன் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் கையெழுத்திடும் பட்சத்தில் பலஸ்தீனப் பிரதேசத்தில் சிவில் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக தீவிரவாத பலஸ்தீனக் குழு ஒன்று அறிவித்துள்ளது.

இஸ்ரேலுடன் உடன்பாடு செய்துகொண்டால் யாஸீர் அரபாத்தைக் கொலை செய்யப்போவதாக பலஸ்தீன மக்கள் முன்னணியின் தலைமைப்பீடம் எச்சரித்துள்ளது.

இதற்கிடையில்—

இஸ்ரேலிய நலன்களை இஸ்ரேலிய அரசு, பலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்கு விற்றுவிட்டது என்று இஸ்ரேலிய எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் இஸ்ரேலிய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரப் போவதாக பிரதான எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

இஸ்ரேல் அரசுக்கு எதிராக அங்கு பரவலாக ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

(உ-எ-6)

## புக்காரா வட்டமிட்டது

நேற்று முற்பகல் 11 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று அரியாலை, யாழ்ப்பாணம், கோண்டாவில், கோப்பாய் பகுதிகளை உள்ளடக்கி வட்டமிட்டுச் சென்றது.

---

## சமஷ்டியை ஏற்காதவரை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலை அற்ற விதத்தில் பேச்சுவார்த்தை நடத்தவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனையாக யாழ் குடாநாடு மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை பூரணமாக அகற்றும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை விடுதலைப் புலிகள் போராளிகள் வற்புறுத்தமாட்டார்கள்.

எப்படியாயினும்— இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுவதில் அரசுக்கு அக்கறை இருக்குமானால் வடக்கு-கிழக்கில் தேவையான சாதக நிலைவரங்களை எடுக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி அரசமைப்பு முறையை பெரிய சிங்கள அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத வரை எந்தத் தீர்வும் சாத்தியமாகாது.

1987க்கு முன்னர் விடுதலைப் புலிகள் போராளிகள் இந்தியாவில் இந்திய இராணுவ அதிகாரிகளாலும் வட பகுதியிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தனர். இப்போது எமது போராளிகளைப் பயிற்றுவிக்க ஈழம் (வடக்கு-கிழக்கு) முழுவதும் பயிற்சி முகாம்கள் உள்ளன.

இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் நிரந்தரமாக வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை அங்கீகரிப்பதாகவும்—

தமிழ் தேசிய இனத்தை அங்கீகரிப்பதாகவும்—

தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகவும் இருக்கவேண்டும்.

1985இல் திம்புவில் நடந்த பேச்சுக்களின்போது விடுதலை புலிகள் இயக்கத்தால் எழுப்பப்பட்ட - நான்காவது அம்சமான - இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழரின் உரிமைகள் பற்றிய விஷயத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் வற்புறுத்தாது. இந்திய வம்சாவளி தமிழர்களின் பெரும்பாலான உரிமைகள் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன

கிழக்கில் வாழும் முஸ்லிம் மற்றும் சிங்களவர்களின் உரிமைகளை உத்தேச சமஷ்டி அமைப்பு பாதுகாக்க வேண்டும்.

1990 ஜூன் வரை ஜனாதிபதி பிரேமதாசவுடன் நடத்தப்பட்ட பேச்சுகளின்போது 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபை முறையை இடைக்கால ஒழுங்காக ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் சம்மதித்து இருந்தது.

இரண்டு காரணங்களுக்காக தேர்தல் நடத்தப்பட முடியாது. ஒன்று - வடக்கு - கிழக்கின் சில பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளன.

இரண்டாவது - பெரும்பாலான தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஐ நாவின் மத்தியஸ்த யோசனையை அரசு நிராகரித்தது குறித்து வருந்துகின்றேன்— என்றார்.

---

### பாரிஸில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கொண்டு இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தாம் யாழ்ப் [illegible] புலிகளின் தலைவர்களைச் சந்திக்கத் தயார் என்றும் தொண்டமான் கூறியுள்ளார்.

(உ-த-எ-6)

### மட்டு. மாவட்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டம் அதிரடிப்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிற்கு அருகே தாழங்குடா வரை விஸ்தரிக்கப்பட்ட விசேட அதிரடிப் படை முகாம்கள் இப்போது ஆரையம்பதி வரை அமைக்கப்பட்டுள்ளன

முன்னர் இவ்விடங்களில் இருந்த இராணுவத்தினர் வேறு இடங்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர். (த)

### தகர்க்கப்பட்ட..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்து மில்லியன் டொலர் பெறுமதியான "டோறா" அதிவேகப் படகு தகர்ப்பு மற்றும் ஜானகபுர (மண்கிண்டி மலை) இராணுவ முகாம் தகர்ப்பின்போது 10 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களைப் புலிகளிடம் இழந்தமை உட்பட கடந்த இரண்டு மாத காலத்தில் பெரும் இராணுவ நிதி இழப்பீட்டை ஸ்ரீலங்காப் படையினர் சந்தித்திருக்கின்றனர்.

அதிகரித்து வரும் இராணுவச் செலவால் திணறி வரும் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கு இச்சம்பவங்கள் மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன.

டோறா படகை இழந்தமை வடக்குக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படையின் ரோந்தை கணிசமான அளவு பாதித்திருக்கிறது. — என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

---

## காட்டின் மரம் உயர நாட்டின் தரம் உயரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானோதய சி. க. கூ. சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

அளவெட்டி ஞானோதய சி. க. கூ. சங்கக் கூட்டம் 4 - 9 - 93 சனிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு மருதனார் மடத்திலுள்ள அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் தங்கள் கையேடுகளுடன் தவறாது சமுகம் தரவும்.

தலைவர்

(6636)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

எமது மன்றத்தினால் 27-08-1993 இல் நடைபெற்ற சீட்டிழுப்பில் பரிசில்களைப் பெறும் அதிர்ஷ்ட இலக்கங்கள் பின்வருமாறு;-

1 ஆம் பரிசு **605**
2 ஆம் பரிசு **213**
3 ஆம் பரிசு **1038**

ஆறுதல் பரிசில்கள்

**1655, 406, 115, 407, 220,**

**03-09-1993** வெள்ளிக்கிழமை பிற்பகல் **5-30** மணிக்கு பரிசளிப்பு நடைபெறும்,

காளிகோயிலடி இந்து இளைஞர் மன்றம்.
திருநெல்வேலி.

(27142)

## கண்ணீர் அஞ்சலி

அமரத்துவமெய்திய எமது முன்னாள் அதிபர்

### பொ. சபாரெத்தினம்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

பராசக்தி வித்தியாலயம்,
றோ. க. த. க. பாடசாலை,
அல்லைப்பிட்டி.

B.M.C ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (27141)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா திருநாவுக்கரசு

(ஓய்வு பெற்ற சாரதி, யாழ். மாநகரசபை)

யாழ்ப்பாணம், அரசடி வீதியைச் சேர்ந்த கந்தையா திருநாவுக்கரசு 31-8-93இல் காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-9-93) புதன்கிழமை காலை 10-மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்:

தகவல்:
கந்தையா நயினார்
(சகோதரன்)

5 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். [27135]

### சின்னத்துரை சந்திரசேகரம்

(ராசு)

கச்சேரியடியைச் சேர்ந்த சின்னத்துரை சந்திரசேகரம் 31-08-93 அன்று காலமாகிவிட்டார்.

இவர் வரதலட்சுமியின் அன்புக் கணவரும், இரவிசங்கர் (U.K.), உதயசங்கர் (U.K.), சிறீதரன் (கனடா), பாலச்சந்திரன் (U.K.), பிரேமசாந்தன், காலஞ்சென்ற இராஜேஸ்வரன், அனுஷ்யா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற இரத்தினம், சின்னம்மா, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், வதனி, யோகவாணி, ரமணா, பாலசுந்தரம் (சாவகச்சேரி கோட்டம்) தேவதாஸ், காசிநாதன், சிறீசாந்தன் (I.C.R.C.), தேவஞானி, சுசீந்திரன் (மக்கள் வங்கி), சுகந்தி, சுமந்திரன் ஆகியோரின் மாமனாரும், ரங்கன், சித்திரா, இந்திரன் ஆகியோரின் சிறிய தகப்பனும், சி. கந்தசாமி (இளைப்பாறிய நீதிமன்ற முதலியார்), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், டினேஷ், றொபேஷ், பிரசாந், சிந்துஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 01-09-93 புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3-30 மணியளவில் கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. பிரேமசாந்தன்
(மகன்)

16/1, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம், (27143)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### கடற்படைக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் கூறியதாவது:-

கடற்புலிகளின் வளர்ச்சியில் உந்து சக்தியாகத்திகழ்ந்து கடற்படையினருக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்திய சாதனையை புரிந்த இந்த மாவீரர்களின் தீரத்தை ஈழத்து மக்கள் மனதில் இருத்த வேண்டும்.

சாதாரணமாக தரையில் முகாமை தாக்கி அழித்து கரும்புலித் தாக்குதல் நடத்தி வெற்றி பெறுவது ஒருபுறம். கடலில் எதிர்பாராதவிதமாக தாக்குதல் நடத்த கடற்படையினர் வருவர்; செல்வர். இவாலி ஊடாகச் செல்லும் பயணிகளை அழிக்க கடற்படையினர் வருவர்; செல்வர்.

திடீரென வரும் கடற்படைப் படகுகள் மீது கடற்புலிகள் தாக்குதல் மேற்கொள்கின்றனர். அந்த தாக்குதல்கள் தொடர்ந்தும் நடக்கும். ''டோறா'' அதிவேக படகை திடீரென வழிமறித்து கடற்புலிகள் தாக்குதல் தொடுக்க, கடற்கரும்புலிகள் ஊடறுத்துச் சென்று அதை தகர்த்தனர்.

தமிழீழ போராட்டத்தில் இதுவரை கைப்பற்றாத ஆயுதங்களை கைப்பற்றியுள்ளோம்; பெறுமதிமிக்க படகை தகர்த்தெறிந்துள்ளோம். எமது போராட்டத்தில் இத்தாக்குதல் ஒரு மைல்கல் ஆகும்.

இந்தப் படகு தகர்ப்பின் தாற்பரியத்தை மக்கள் உணர வேண்டும். படகின் தன்மை, அதன்பெறுமதி, அதன் நாசகாரச் செயல், கடற்படையினரில் அதன் பங்கு, பணி ஆகிய விடயங்களை மக்கள் உணர வேண்டும்.

திருவுருவப்படமாக காட்சியளிக்கும் மேஜர் புகழரசன் 3 ஆண்டுகளுக்கு முன் தன்னை போராளியாக இயக்கத்தில் இணைத்துக் கொண்டான். காலில் பயங்கர காயம் ஏற்பட்டு நடக்க முடியாத நிலையில் இருந்தபோதும், கடற்படைப்படகை தானே தகர்க்க வேண்டும் என்ற ஓர்மத்தில் இத்தாக்குதலுக்கு முன்வந்தான்.

கப்டன் மணியரசன் தனது 14 ஆவது வயதில் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, 16 ஆவது வயதில் கரும்புலியாகி சாதனை படைத்துள்ளான்.

அது மட்டுமல்ல, இனிவரும் நாட்களில் இவர்களின் வரிசையைத் தொடர கடற்கரும் புலிகள் தயாராக நிற்கிறார்கள்; கடற்படையினரின் படகுகள், கலங்களை அழிக்கத் தயாராகுகிறார்கள் அதன் மூலம் கடற்படையினரின் மனோபலத்தை உடைப்போம் என்றார். (உ-3)

### கடற் கரும்புலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடம், ஆனைக்கோட்டை, மானிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, மூளாய், சங்கரத்தை, கொக்குவில், திருநெல்வேலி, கந்தர்மடம், நல்லூர், கல்வியங்காடு, கோப்பாய், நீர்வேலி, புத்தூர் ஆகிய இடங்கள் ஊடாக ஊர்தி கொண்டு செல்லப்பட்டு சுன்னாகத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம் பெற்றது.

இதனையடுத்து மருதனார் மடம், உரும்பராய் ஊடாக உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி கோப்பாய் மாவீரர் இல்லத்தை அடைந்தது அங்கு நினைவுக்கல் நாட்டப்பட்டது.

தென்மராட்சி மற்றும் வடமராட்சியின் பல இடங்களின் ஊடாக கரும்புலிகளின் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி கொண்டு செல்லப்பட்டு மாலை நாகர் கோவிலில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

இதனையடுத்து வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும் நினைவுக்கல் நாட்டப்பட்டது.

இதேவேளை — [illegible] பகுதிகளிலும் இம் மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி நேற்று எடுத்து வரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1956 ஆம் ஆண்டு முதல்
## இனக்கலவரங்களில் 67 ஆயிரம் பேர் கொலை

யாழ்ப்பாணம், செப் 1

1956 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களில் 67 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அமெரிக்காவின் மசாசூசெட் மாநில முதல்வர் மைக்கல் ஈகப்டிவானா தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் 40 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் காணாமல் போய் உள்ளனர். இவர்கள் அரச படைகளாலும் ஊர்காவல் படைகளாலும் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் அவர் சொன்னார்.

அண்மையில் மசாசூசெட் மாநிலத்தில் மாநில முதல்வர் தமிழீழ தினப் பிரகடனம் செய்தமை தெரிந்ததே. (உ-த)

## யாழ். பாடசாலைகளிடையே விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 1

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழாவை ஒட்டி யாழ். கல்வித் திணைக்களம் பட்மின்டன் (பூம்பந்து), மேசைப் பந்து மற்றும் சதுரங்கச் சுற்றுப் போட்டிகளை நடத்தவிருக்கிறது.

இப்போட்டிக்கான விண்ணப்பங்களை பாடசாலைகளும் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ''உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி), யாழ் கல்வித் திணைக்களம்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். போட்டி விவரங்கள் வருமாறு:-

#### பட்மின்டன்

★ மாணவர்கள்:- 15 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் தனித்தனியாக ஒற்றையர், இரட்டையர் சுற்றுப் போட்டிகள் நடைபெறும்.

★ ஆசிரியர்கள்:- ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக ஒற்றையர், இரட்டையர் ஆட்டங்கள் நடைபெறும்.

இரட்டையர் ஆட்டங்களில் பங்குபற்றுவோர் ஒரே பாடசாலையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டியதில்லை.

#### மேசைப்பந்து

பட்மின்டன் போட்டிகளுக்கு வகுக்கப்பட்ட அதே அடிப்படையில் மேசைப்பந்துப் போட்டிகளும் மாணவர், மாணவிகள், ஆசிரியர்கள் (ஆண்), ஆசிரியைகள் (பெண்) எனஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக ஒற்றையர், இரட்டையர் அணிகளுக்கிடையில் சுற்றுப் போட்டி நடத்தப்படும்.

#### சதுரங்கம்

மாணவர்:- இது தனி நபர் போட்டியாகும். 15 வயதுக்குக் குறைந்தவர்கள், 15 வயதுக்கு மேற்பட்டோர் என இருவகைப் பிரிவுகளில் நடைபெறும்.

ஆசிரியர்:- இது ஆண், பெண் இரு பாலருக்கும் பொதுவான போட்டியாக நடைபெறும்.

## முந்திரிகைப் பண்ணை முகாமிலிருந்து படை வாபஸ்

மன்னார் மாவட்டத்தின் மரமுந்திரிகைப் பண்ணை (கஜூவத்த சிறிலங்கா இராணுவ முகாமில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் அம் முகாமை விட்டுப் பின் வாங்கி சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 34 ஆண்டுகளாக இப்பகுதி சிங்கள ஆக்கிரமிப்பில் இருந்துள்ளது. மண்கிண்டிமலை போன்று மன்னார் மாவட்டத்தின் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இம் முகாமையும் விடுதலைப் புலிகள் தாக்கக்கூடும் என்ற அச்சத்தினாலேயே இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர் என்று தெரிவிக்கப்பட்டது.

6 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள மர முந்திரிகை பண்ணையைப் பாதுகாக்கவே இம் முகாம் அமைக்கப்பட்டது. இம் முகாம் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. எனினும் மீண்டும் அங்கு இராணுவ முகாம் அமைக்கப்பட்டது.

இம்முகாமில் தங்கியிருந்த எழுபதுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பின்வாங்கி, சிலாவத்துறை இராணுவ முகாமிற்கு சென்றுள்ளனர். (உ-த)

## தெரிவுக் குழு கூட்டம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டு உள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அடுத்த அமர்வு இம் மாதம் 21 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

சென்ற 26 ஆம் திகதியன்று நடைபெறவிருந்த தெரிவுக் குழுவின் அமர்வு கோரமின்மையால் இடம்பெறவில்லை.

45 பேர் கொண்ட குழுவின் சென்ற கூட்டத்தில் 10 பேர் மட்டுமே கலந்து கொண்டனர். கூட்டம் நடைபெறுவதற்கு குறைந்தது 14 உறுப்பினர்கள் சமுகமளித்திருக்க வேண்டும். (உ-எ)

கொக்குவில்

## பொற்பதி விநாயகர் ஆலயம்
## வைரவர் பொங்கல் உற்சவம்

இன்று பிற்பகல் 3.00 மணி முதல் நடைபெறும்

விசேட நிகழ்ச்சிகள் :-

- மாலை 6.30 மணி: நாதஸ்வர தவில் கச்சேரி
  கல்வியங்காடு,
  வி. செல்வராஜா குழுவினர்
- இரவு 7.30 மணி: வில்லிசை
  ''பார்வதி திருமணம்''
  சின்னமணி குழுவினர்
- இரவு 9.00 மணி: வயலின் இசைவிருந்து
  நாச்சிமார் கோவிலடி
  ஜெயராமன் குழுவினர்

— பொற்பதி இளைஞர்கள் —

(27144)